# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

## ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

## (20.06.2015 முதல் 24.06.2015)

**அறிக்கை எண் 47/2015** **தேதி: 19.06.2015**

**மாநிலத்தின் கடந்த வார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 30°செ முதல் 39°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 22°செ முதல் 30°செஆகவும் பதிவானது கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 17°செ முதல் 21°செஆகவும், இரவு நேர வெப்பநிலை 10°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் ஒரு சில இடங்களில் இலேசான மழை காணபட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (20.06.2015 முதல் 24.06.2015)**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். இலோசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 20 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 20.06.15 | 2 | 33 | 23 | 7 | 80 | 70 | 20 | தென் மேற்கு |
| 21.06.15 | 3 | 33 | 23 | 7 | 80 | 70 | 20 | தென் மேற்கு |
| 22.06.15 | 2 | 33 | 23 | 7 | 80 | 70 | 20 | தென் மேற்கு |
| 23.06.15 | 2 | 33 | 23 | 7 | 80 | 70 | 20 | தென் மேற்கு |
| 24.06.15 | 2 | 33 | 23 | 7 | 80 | 70 | 20 | தென் மேற்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி இறவையில் மக்காச்சோளத்தினை விதைக்கும் முன் இமிடாகுளோபிரிட் 70WS மருந்தினை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் பயன்படுத்தி விதை நேர்த்தி செய்து பின் விதைக்கவும்.
- ✓ மக்காச்சோளம் விதைத்த மூன்று நாட்களுக்குள் அட்ரசின் என்ற முளைக்குமுன் தெளிக்கும் களைக்கொல்லியினை ஏக்கருக்கு 400 கிராம் அளவில் 200 லிட்டர் நீரில் கலந்து தெளிக்கவும். எதிர்பார்க்கப்படும் மழையினை பயன்படுத்தி மானாவாரியில் ராகி பயிரினை தாளவாடி மற்றும் சத்தியமங்கலம் பகுதிகளில் விதைப்பு செய்யலாம்.
- ✓ மழை எதிர்பார்க்கப்படுவதால் நடவு செய்த குறுகிய கால கார் பருவ நெல் வயல்களில் போதிய வடிகால் வசதி மேற்கொள்ளவும்.
- ✓ தக்காளி நாற்றாங்கால் அமைக்க இது நல்ல தருணம். விதைப்பதற்கு 24 மணி நேரத்திற்கு முன் 1 கிலோ விதைக்கு 4 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி அல்லது 10 கிராம் சூடோமோனாஸ் கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்கவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ தக்காளி நாற்றாங்கால் அமைக்க இது நல்ல தருணம். விதைப்பதற்கு 24 மணி நேரத்திற்கு முன் 1 கிலோ விதைக்கு 4 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி அல்லது 10 கிராம் சூடோமோனாஸ் கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்கவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை.**